**செய்தி வெளியீடு எண்:125** **நாள்:14.02.2021**

**இன்று (14.2.2021), சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள், சென்னை மெட்ரோ இரயில் முதல் கட்டம் விரிவாக்கம், சென்னை கடற்கரை முதல் அத்திப்பட்டு வரையிலான 4—வது இரயில் வழித்தடம் தொடக்கம், விழுப்புரம் — தஞ்சாவூர் — திருவாரூர் வரையிலான மின்மயமாக்கப்பட்ட ஒரு வழி இரயில் பாதை தொடக்கம் மற்றும் அர்ஜுன் எம்.பி.டி. MK-IA ரக கவச வாகனத்தை இராணுவத்திடம் ஒப்படைத்தல் ஆகிய திட்டங்களை துவக்கி வைத்து, கல்லணை கால்வாய் புதுப்பித்தல் மற்றும் நவீனப்படுத்தும் திட்டம் மற்றும் சென்னை, இந்திய தொழில்நுட்ப கழக டிஸ்கவரி வளாகம் அடிக்கல் நாட்டிய விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையேற்று ஆற்றிய உரை:—**

---

பூமிக்கு வந்த புண்ணியம் !

ஏழைகளின் இல்லங்களில் விளக்கேற்றிய ஒளி விளக்கு!

தாய்மையின் உறைவிடம் ! தர்மத்தின் மறு உருவம் !

அன்னைத் தமிழ் பூமிக்கு வந்த ‘அம்மா’ என்னும் ஆலயம் !

இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி

அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

சென்னை வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் - விம்கோ நகர் வரையிலான சென்னை மெட்ரோ ரயில் முதல் கட்ட நீட்டிப்பு திட்டத்தில் மெட்ரோ ரயில் பயணிகள் சேவையை துவக்கி வைத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை இன்று தொடங்கவும், அடிக்கல் நாட்டவும் வந்துள்ள

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஜி அவர்களே!

இந்த எழுச்சிமிகு நிகழ்ச்சியில் பங்கு பெற்றுள்ள

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களே!
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே!
மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே!
மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களே!

வருகை தந்துள்ள

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்!
மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே!
மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களே!
அரசு உயர் அதிகாரிகளே!
பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்களே!
சிறப்பு அழைப்பாளர்களே!
பெரியோர்களே! தாய்மார்களே!
பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

**18.1.2021** அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நான் நேரில் சந்தித்தபோது, தமிழ்நாட்டில் முடிவுற்ற திட்டங்களை துவக்கி வைக்கவும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவும், தமிழ்நாட்டுக்கு வருகை தருமாறு நான் வேண்டுகோள் விடுத்தேன். நான் விடுத்த அன்பு வேண்டுகோளினை ஏற்று, தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்துள்ள மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை தமிழ்நாட்டு மக்கள் சார்பிலும், எனது சார்பிலும், வருக! வருக! என வரவேற்பதில் பெருமை கொள்கிறேன்.

"On behalf of the people of Tamil Nadu and on my personal behalf, I extend a hearty welcome to the Hon'ble Prime Minister, who has graced this function of inauguration and laying the Foundation Stones for the various projects, which would greatly benefit the people of Tamil Nadu".

I would like to I thank the Hon'ble Prime Minister for announcing new National Highway projects, with an investment of One Lakh Crore rupees and improvement of various fishing

Harbours of Tamil Nadu in the 2021-22 Budget. These projects would be a boon to the people of my State.

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் வழிகாட்டுதல்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக, உலக நாடுகளை ஒப்பிடுகையில் இந்தியாவில்தான் கொரோனா நோய்த் தொற்று வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது என்பதை இங்கே பெருமையுடன் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இதனைத் தொடர்ந்து, இந்தத் தொற்றினை முற்றிலும் வேரறுக்க, இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகளை, மக்களுக்கு போடும் திட்டம் தற்போது சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேலும், நம் நாட்டில் தயாரிக்கப்படும் தடுப்பூசிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது மிகவும் பாராட்டுக்குரியது. இதனால் நமது நாட்டின் பெருமையை உலகளவில் வெகுவாக உயர்த்துவதற்கு இதற்கான முயற்சி எடுத்து வெற்றி கண்ட மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை வெகுவாகப் பாராட்டி, நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனா நோய்த்தொற்று காரணமாக அமல்படுத்தப்பட்ட ஊரடங்கினால் தொய்வடைந்த நம்நாட்டின் பொருளாதாரத்தை வெகு விரைவில் தனது துரித நடவடிக்கைகளால் இயல்பு நிலைக்கு கொண்டு வந்த மாண்புமிகு பாரதப் பிரதமரின் நடவடிக்கைகள் மிகவும் பாராட்டுக்குரியது.

I would like to recall with a sense of pride, the appreciation of the Hon'ble Prime Minister for the efforts taken by Hon'ble Amma's Government in containing the COVID-19 pandemic effectively and he had urged the other States to follow the Tamil Nadu's Model.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை மாநகரத்தை உலகத் தரத்திற்கு மேம்படுத்த, பல்வேறு சிறப்பான உட்கட்டமைப்பு திட்டங்களை வகுத்து செயல்படுத்தினார்கள். பெருநகர சென்னையில் போக்குவரத்து நெரிசலை

குறைப்பதற்காகவும், மக்களின் பயண நேரத்தை குறைப்பதுடன், பயணம் எளிமையாகவும், வசதியாகவும் அமைய, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்கு பார்வையோடு, மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்தார்கள். அதன் விளைவாகத்தான், இன்று இத்திட்டத்தில் பல்வேறு வழித்தடப் பகுதிகளில் பயணிகள் சேவைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு அம்மாவின் அரசும், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை மிகுந்த முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது. அதன் விளைவாக இன்று, சென்னை மெட்ரோ ரயில் திட்டம் – கட்டம்–I ன் கீழ், 18,380 கோடி ரூபாய் செலவில் 45.1 கிலோ மீட்டர் நீளத்திலான வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரையிலான வழித்தடமும், சென்ட்ரல் இரயில் நிலையம் முதல் பரங்கிமலை வரையிலான வழித்தடமும் அமைத்து முடிக்கப்பட்டு, 10.2.2019 முதல் பயணிகள் சேவை முழுமையாக நடைபெற்று வருகிறது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் – கட்டம்–Iன் நீட்டிப்பு திட்டத்தின் கீழ், 3,770 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 9.051 கிலோ மீட்டர் நீளத்தில் வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் / விம்கோ நகர் வரையிலான திட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் 23.7.2016 அன்று அடிக்கல் நாட்டினார்கள். தற்போது இப்பணிகள் முடிவுற்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் திருக்கரங்களால் இன்று தொடங்கி வைக்கப்பட உள்ளதற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறப்பு வாய்ந்த சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தை இங்கு செயல்படுத்துவதற்கு பெரிதும் உறுதுணையாக இருந்த, மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்திற்கும், நிதி அமைச்சகத்திற்கும், இத்திட்டத்திற்கு நிதி பங்களிப்பு வழங்கிய ஜப்பான் பன்னாட்டு முகமைக்கும் (JICA) என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது விரிவடைந்து வரும் சென்னை பெருநகரின் போக்குவரத்து தேவையினை கருத்தில் கொண்டு, மாண்புமிகு அம்மாவின் அரசு, **118.90** கி.மீ. நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம் – இரண்டாம் கட்டத்தினை **63,246** கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த முடிவு செய்து அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

I request the Hon'ble Prime Minister to facilitate sanction of Phase II of Chennai Metro Rail Project under 50:50 joint venture partnership basis between Government of India and Government of Tamil Nadu, as was done for Phase I.

I would also like to thank the Hon'ble Prime Minister for having made an announcement about the Chennai Metro Rail Phase II scheme in the Union Budget for 2021-2022.

கடந்த **25.5.2018** அன்று நடைபெற்ற மெட்ரோ ரயில் துவக்க விழாவில் நான் அறிவித்தபடி, விமான நிலையத்துடன் முடிவடையும் மெட்ரோ ரயில் பாதையை வண்டலூர் அருகில் உள்ள கிளாம்பாக்கம் கிராமத்தில் அமைக்கப்படவுள்ள புறநகர் பேருந்து நிலையம் வரை நீட்டிப்பு செய்வதற்கான சாத்தியகூறு ஆய்வுகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கோயம்புத்தூர் மாநகரத்தில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஆரம்பக் கட்ட ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீர் மேலாண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள், மழைநீர் சேகரிப்பை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றினார்கள். அதில் வெற்றி கண்டு பொதுமக்களின் பாராட்டையும் பெற்றார்கள். தற்போது மாண்புமிகு அம்மாவின் அரசு அவர்களின் வழியிலேயே, மழைநீர் சேகரிப்பை முன்னெடுத்துச்

செல்லவும், நீர் நீலைகளின் கொள்ளளவினை அதிகப்படுத்தி பாதுகாக்க, குடிமராமத்து திட்டத்தினை விவசாயிகளின் பங்களிப்புடன் வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது.

பன்னெடுங்காலத்திற்கு முன்பே, கரிகால் பெருவளத்தானால் அமைக்கப்பட்ட கல்லணை இன்றளவும் நிலைத்து நின்று தமிழர்களின் பொறியியல் திறமையை உலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. 4,200 கன அடி நீர் செல்லும் கல்லணை கால்வாயினை நவீன வசதிகளுடன் 2,640 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 1,714 மதகுகள், 26 கீழ்குமிழி பாலங்கள், 108 கிணறு நீர் இழுகுழாய், 76 சுரங்கங்கள், 28 நீர் ஒழுங்கிகள், 20 பாலங்கள் மற்றும் 403 ஏரிகள் புனரமைக்கப்படும். மேலும், 108 கோடி ரூபாய் மதிப்பீட்டில் SCADA தொழில்நுட்ப மேலாண்மை முறை செயல்படுத்தப்படும். இதன் பயனாக தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 67,500 ஏக்கர் நிலங்கள் தொடர்ந்து பாசன வசதி பெறும்.

இந்த உன்னதமான திட்டத்திற்கு இன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தன் திருக்கரங்களால் அடிக்கல் நாட்ட உள்ளார்.

I request the Hon’ble Prime Minister to provide necessary financial assistance for the Grand Anaicut Extension and Modernization Scheme as requested by our Government.

தற்பொழுது மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட உள்ள நீர் மேலாண்மை திட்டம் செயல்பாட்டுக்கு வரும் பொழுது, மேலும் அதிக பரப்பளவில் பயிர் சாகுபடி மேற்கொள்ளப்படும் என்பது உறுதி.

நாட்டிற்கே முன் உதாரணமாக, பல்வேறு நீர் மேலாண்மை திட்டங்களை எனது தலைமையிலான அரசு சிறப்பாக செயல்படுத்தி வருவதால், மத்திய ஜல்சக்தி அமைச்சகத்தினால், நீர் மேலாண்மையில் சிறந்த மாநிலத்திற்கான விருது,

தமிழ்நாடு அரசிற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை இங்கே பெருமையுடன் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

மத்திய அரசின் பல்வேறு துறைகள் மூலம் தமிழ்நாட்டில் பல திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. இன்னும் சில திட்டங்கள் துவங்கப்பட உள்ளன. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், இன்று முடிக்கப்பட்ட திட்டங்களை துவக்கி வைக்கவும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவும் உள்ளார்.

- இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT), சென்னையில் 1959 முதல் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மாவின் அரசு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் 163 ஏக்கர் நிலத்தை IIT–க்கு 2017–இல் இலவசமாக வழங்கியது. இங்கு 1,000 கோடி ரூபாயில் உலகத் தர ஆராய்ச்சி நிறுவனங்கள் அமைப்பதற்காக 'டிஸ்கவரி வளாகத்திற்கு' அடிக்கல் நாட்டவுள்ளதற்காகவும்,
- தெற்கு இரயில்வே, துறைமுகங்களை இணைப்பதற்காக சென்னை கடற்கரை–அத்திப்பட்டு இடையே 22.1 கி.மீ, நான்காவது ரயில் பாதை மற்றும் விழுப்புரம்–கடலூர்–திருவாரூர் இரயில் தடத்தை மின் இரயில் பாதையை அர்ப்பணித்து, 716 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களை துவக்கி வைக்கவுள்ளதற்காகவும்,
- சென்னை, ஆவடியில் உள்ள DRDO நிறுவன CVRDE-ல் வடிவமைக்கப்பட்ட இராணுவ டாங்க் அர்ஜுன் MBT மார்க்–1, இராணுவ பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்க உள்ளதற்காகவும்,
- மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு, தமிழ்நாட்டு மக்கள் சார்பிலும், எனது சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்வினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

I once again thank the Hon'ble Prime Minister for accepting my invitation for inaugurating and laying the foundation stones for various projects which will greatly benefit to the people of Tamil Nadu.

நன்றி! வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**